பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 13 வெள்ளிக்கிழமை (28 - 07 - 2000) VALAMPURI ஒலி: 221

## ★ உத்தேச அரசியல் அமைப்புதொடர்பாக அன்ரன்பாலசிங்கத்தை ஜனாதிபதி சந்திக்க முயற்சி

### லண்டனில் கதிர்காமர், றொனி ஏற்பாடு

(கொழும்புவிசேடநிருபர்)

அடுத்தமாதம் முதல்வாரத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் உத்தேசஅரசியல்சீர்திருத்தமசோதா தொடர்பாக லண்டனில்விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்துடன் இருதரப்பு பேச்சுவார்த்தையினை நடத்துவதற்கு லக்ஷ்மன்கதிர்காமர்முயற்சி செய்துவருவதாகத்தெரியவருகிறது.

தற்போது லண்டனில் தங்கியுள்ளகதிர்காமர் இதுவிடயத்தில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து உதவி கோரியுள்ளதாகவும் இச்சந்திப்பு லண்டனிலுள்ள ஜனாதிபதிசந்திரிகாவின் ஆசியுடனேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா கடந்த திங்கள் லண்டன் புறப்பட்டபோது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் அங்கு சென்றிருந்தார்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரின் உதவியுடன் — ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் லக்ஷ்மன் கதிர்காமர் ஈடுபட்டிருந்ததாகவும், அவ்வேளையில் சந்திரிகா அவசரமாக நாடு திரும்பவேண்டி

[8ஆம் பக்கம் பார்க்க]

## வடபகுதி இராணுவத் தளபதி ஜானகபெரேரா பதவி மாற்றம்

(கொழும்பு)

யாழ். மாவட்டம் உள்ளிட்ட வடபகுதிக்கான இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பொதுத் தேர்தல் சூடு பிடித்து வருகின்ற இச்சூழ்

ஜானகபெரேரா யாழ்குடாவின் இராணுவ நடவடிக்கைத் தளபதியாகஇருப்பதை சந்திரிகா அரசு விரும்பாமையே இம்மாற்றத்துக்கு காரணமென்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்போது கொழும்பு இரா

மையை பொறுப்பேற்றுள்ள ஜானகபெரேரா ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர் என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (ந-4)

## பயணிகள் கப்பல்

## நல்லூர் உற்சவகால கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டம் இன்று காலை

(8ஆம் பக்கம்பார்க்க)

## ★ தென்மராட்சியில் இராணுவக் கட்டுப்பாட்டில் 2500குடும்பங்கள் தங்கியுள்ளனர்

[தென்மராட்சி]

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுமார்2500குடும்பங்கள் தங்கியுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் எஸ். சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இம்மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்தில் கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவில் 28 கிராம சேவையாளர் பிரிவுகள் இராணுவக் கட்டுபாட்டுக்குள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வாதிகார ஆட்சி புரியும் ஜனாதிபதி சந்திரிகா!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கசர்வாதிகார ஆட்சியை நடத்தி வருவதாகவும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற ஜனாதிபதியும் அவரது அரசும் தவறி விட்டது என்றும் ஜனநாயக இடதுசாரிமுன்னணியின்செய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தரம்9 மாணவர்களுக்கு கல்விச் சான்றிதழ்

[யாழ்ப்பாணம்]

2000 ஆம் ஆண்டில் இருந்து 9 ஆம் தரத்தில் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு கல்வித் திணைக்களம் சான்றிதழ் ஒன்றினை வழங்கவுள்ளது.

இச்சான்றிதழ் தற்போது நடைமுறையில் இருக்கும் தொடர் மதிப்பீட்டின் அடிப்படையிலும் வருட இறுதியில் மாகாண மட்டத்தில் நடத்தப்பட இருக்கும் பொதுப்

( 8ஆம் பக்கம் பார்க்க)

தவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பொதுத் தேர்தல் சூடு பிடித்து வருகின்ற இச்சூழ்நிலையில் மேஜர் ஜெனரல்

காரணமென்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்போது கொழும்பு இராணுவ அலுவலகத்தில் கட

# ஜனாதிபதி புலமைப்பரிசில் யாழ். வலயத்தில் 80 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி புலமைப் பரிசில் பெறுவதற்கு யாழ்ப்பாணக் கல்விவலயப் பாடசாலைகளில் இருந்து 80 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

க.பொ.த. உயர்தரத்தில் 60 மாணவர்களுக்கும் தரம்

[8ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி இன்று நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இன்று கொழும்பு திரும்புவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு திரும்பும் ஜனாதிபதி உடனடியாக காலஞ்சென்ற விமானப் போக்குவரத்து சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவார். (வ)

## இடம்பெயர்ந்த

# 'உ' அட்டை வைத்திருப்போருக்கு இரு மாத நிவாரணம் கிடைக்கும்

## டக்ளஸ் எம். பி. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாக யாழ். மாவட்டபாராளுமன்றஉறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர்நாயகமுமானடக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

[8ஆம் பக்கம் பார்க்க]

# பயணிகள் கப்பல் நாளை வரும்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு இன்று புறப்படும் ''சிற்றி ஒவ் றிங் கோ'' பயணிகள் கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ந-4)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

மானிப்பாய் பகுதியில் இம்மாதம் 20ந் திகதி இடம்பெற்ற இராணுவ சுற்றிவளைப்பின் போது

- இசைப்பிரியன் (நாகராஜா சிவபாலன்) யாழ்ப்பாணம் என்றபோராளியும்.

கடந்த 22ம் திகதி இரணை இலுப்பைக்குளத்தில் இராணுவத்தினருடனான மோதலில்

- லெப். மணி (முருகையா சுபாகரன்) மாங்குளம் என்ற போராளியும் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ந-7)

களுக்கு கல்வித் திணைக்களம் சான்றிதழ் ஒன்றினை வழங்கவுள்ளது.

மாகாண மட்டத்தில் நடத்தப்பட இருக்கும் பொதுப்

( 8ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப்பரீட்சைத் திணைக்களத்தில் புதியசேவை நிலையம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் பொதுப்பரீட்சைகளை நடத்திவரும் இலங்கைபரீட்சைத் திணைக்களம் தேசிய மதிப்பிடலுக்கும், பரீட்சித்தலுக்குமான சேவைப் பிரிவை ஆரம்பித்துள்ளது.

இச்சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ள விரும்புவோர். 01—889211 அல்லது 01—889212 எனும் தொலைபேசி இலக்கங்களின் மூலமும், பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் அமைப்பு சட்டமூலம் ஆகஸ்ட் முதல் வாரத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தம் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சர் பட்டிவீரக்கோன் உறுதிபடக் கூறியுள்ளார்.

இச் சீர்திருத்தத்திற்கு ஐக்

(8ஆம்பக்கம் பார்க்க)

# இணக்கம் காணப்பட்ட விடயங்கள் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பவேண்டும்

## ஐ. தே. கட்சி தீர்மானம்

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொதுஜனஐக்கியமுன்னணிக்கும், ஐக்கியதேசியக் கட்சிக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை விடுதலைப் புலிகளுக்கும், பௌத்த மகா

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி**

தபால் வழியில் ஆறுமாதப் பயிற்சி க. பொ. த [சா/த] கடைசித் தகைமை விபரங்களுக்கு: பாலர் ஆசிரியர் சங்கம் கொக்குவில். (1592)


## மாநகரசபை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவ காலத்தில் கோவில் பிரதேசத்தை வர்த்தக மயமாக்காமல், அதன் சுற்றுச் சூழலின் புனிதத் தன்மையைப்பேணிப் பாதுகாப்பதில் சகலரும் ஒத்துழைப்பு வழங்க முன் வரவேண்டுமென மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் தவிர்க்க முடியாதபடி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட விரும்புபவர்கள், இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு, அதற்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் கூறினார். (த)

## கோப்பாய் பிரதேச செயலர் வேண்டுகோள்

(அச்சுவேலி)

அண்மைய பதட்ட நிலை காரணமாக கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து சென்று வேறுபிரிவுகளில் தொடர்ந்தும் தங்கியிருப்பவர்கள் உட்பட கோப்பாய் பிரிவில் உள்ளவர்களின் ஆவணி 2000க்கான நிவாரண விநியோகம் கோப்பாய் பிரதேச செயலகத்தினாலேயே மேற்கொள்ளப் படவுள்ளது.

எனவே தற்போது இடம் பெயர்ந்து வேறு இடங்களில் நிவாரணம் பெறுபவர்கள் தமது நிரந்தர கிராம உத்தியோகத்தர்களைச் சந்தித்து தமது பதிவுகளை மேற்கொண்டு ஆவணி மாதத்துக்கான தமது நிவாரணத்தை உறுதிப்படுத்துமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோப்பாய் பிரிவின் ஆவணி மாதத்திற்கான நிவாரணம் வேறு பிரதேச செயலர்களால் வழங்கப்படமாட்டாதென்பதையும் பிரதேச செயலர் அறியதந்துள்ளார். [உ-14]

# இலங்கை; சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமான ஒன்றல்ல

## டிரோன்பெர்னாண்டோ எம். பி

(கொழும்பு)

இலங்கை சிங்கள பௌத்தர்களின் நாடு என்பதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. அது பல்லின பலமத கலாசார மக்களை கொண்ட ஒரு நாடு என ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்மக்கள், முஸ்லிம் மக்கள், கத்தோலிக்கமக்கள் ஆகியோருக்கு மட்டும் இந்த நாடு சொந்தமெனக் கொண்டால் அவர்கள் கடலில் போய் குதிக்க நேரிடும்?

தமது சொந்த அரசியல் லாபங்களுக்காக தேசியம் என்பதை அடகு வைத்து விட்டு இனவாதம் கக்குகின்ற சிங்கள வீரவிதான இயக்கம், மற்றும் தீவிரவாத பெரும்பான்மை அரசியல் தலைவர் மத்தியில் டிரோன் பெர்னாண்டோவின் கருத்தானைய தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் நிச்சயம் ஒரு நல்லவரவேற்பை பெறும் என்றே அரசியல் நோக்கர்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளார்கள். (க)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

| | |
|---|---|
| 144075 ஏ | 144101 ஏ |
| 144101 பி | 144101 சி |
| 146401 ஏ | 146401 பி |
| 146468 ஏ | 146468 பி |
| 146485 ஏ | 146485 பி |
| 148292 ஏ | 148292 பி |
| 148292 சி | 150349 ஏ |
| 150349 பி | 153239 ஏ |
| 153239 பி | 153239 சி |
| 153359 ஏ | |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 138862 ஏ | 138862 பி |
| 144317 ஏ | 144317 பி |
| 144317 சி | 144526 ஏ |
| 144526 பி | 144612 ஏ |
| 144612 பி | 144612 சி |
| 144612 டி | 144614 ஏ |
| 144614 பி | 144614 சி |
| 144614 டி | 144614 ஈ |
| 144614 எவ் | 144633 ஏ |
| 144633 பி | 144633 சி |
| 144695 ஏ | 144695 பி |
| 144706 ஏ | 144706 பி |
| 144706 சி | 144706 டி |
| 144706 ஈ | 144706 எவ் |
| 144706 ஜீ | 149904 ஏ |
| 149905 ஏ | 150042 ஏ |
| 150042 பி | 150183 ஏ |
| 150184 ஏ | 152606 ஏ |
| 152626 ஏ | 152626 பி |
| 152706 ஏ | 152747 ஏ |
| 152747 பி | 152747 சி |
| 152765 ஏ | 152806 ஏ |
| 152806 பி | 152857 ஏ |
| 152857 பி | 152857 சி |
| 152919 ஏ | 152931 ஏ |
| 152971 ஏ | 152971 பி |
| 152974 ஏ | 152997 ஏ |
| 153063 ஏ | 153063 பி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 142918 ஏ | 142918 பி |
| 142918 சி | 149937 ஏ |
| 149937 பி | 149937 சி |
| 149937 டி | 149983 ஏ |
| 150010 ஏ | 150010 பி |
| 150175 ஏ | 150240 ஏ |
| 150270 ஏ | 152659 ஏ |
| 152659 பி | 152697 ஏ |
| 152697 பி | 152697 சி |
| 152697 டி | 152844 ஏ |
| 153008 ஏ | 153009 ஏ |
| 153009 பி | 153010 ஏ |
| 153010 பி | 153010 சி |
| 153010 டி | 153049 ஏ |
| 153049 பி | 153049 சி |
| 153049 டி | 153059 ஏ |
| 153059 பி | 141819 ஏ |
| 141819 பி | 141830 ஏ |
| 143909 ஏ | 143948 ஏ |
| 143948 பி | 146289 ஏ |
| 150508 ஏ | 150508 பி |
| 150613 ஏ | 153210 ஏ |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 138517 ஏ | 141184 ஏ |
| 141184 பி | 141184 சி |
| 141184 டி | 143992 ஏ |
| 146483 ஏ | 148325 ஏ |
| 150415 ஏ | 152560 ஏ |
| 152560 பி | 153220 ஏ |
| 153220 பி | 153220 சி |
| 153230 ஏ | 153257 ஏ |
| 153257 பி | 153257 சி |
| 153260 ஏ | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 144150 ஏ | 150318 ஏ |
| 150318 பி | 150495 ஏ |
| 150495 பி | 150495 சி |
| 150495 டி | 150586 ஏ |
| 153486 ஏ | |

**உடுவில்**

| | |
|---|---|
| 146446 ஏ | 150330 ஏ |
| 150334 ஏ | 150334 பி |
| 150409 ஏ | 150410 ஏ |
| 150471 ஏ | 150532 ஏ |
| 150532 பி | 150539 ஏ |
| 150539 பி | 153277 ஏ |
| 153277 பி | 153363 ஏ |
| 153363 பி | 153363 சி |
| 153370 ஏ | 153455 ஏ |
| 153455 பி | 153455 சி |

(நா-சு)

## கணனி

## நேர்முகத்தெரிவு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலகர்களை தரம் ஒன்றிற்குபதவிஉயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதிக்கும், ஒகஸ்ட் மாதம் 1ஆம் திகதிக்கும் பிற்போடப் பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை இம் மாதம் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெற இருந்தது குறிப்பிடத்தக்கது. (சு)

## மண்ணெண்ணெய் விநியோகம்

(சங்கானை)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் அப்பிரதேச மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. (த-16)

## கைதடி வயோதிபர் இல்லம் மூளாய் வைத்தியசாலைக்கு?

(யாழ்ப்பாணம்)

கைதடியில் இருந்து இடம் பெயர்ந்து தற்காலிகமாக வடலியடைப்புப் பகுதியில் இயங்கிவரும் அரசினர் முதியோர் இல்லம் மூளாய்வைத்தியசாலைப்பகுதியில் இடம் மாறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வயோதிபர் இல்லத்திற்கு மலசலகூட வசதிகள் நீர்வசதி, இடவசதி, தளபாட வசதி எதுவும் இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்குகின்றது.

தற்போது உள்ள கட்டடப் பகுதியைச் சுற்றி வேலிகள் இல்லாமல் இருப்பது பாதுகாப்பிற்கு குந்தகமாகவுள்ளதுடன் இங்குள்ள வயோதிபர்களில் கணிசமானோர்மன நோயாளிகளாகவும் உள்ளனர்.

இதேவேளையில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு உள்ளதால்அவ் வைத்தியசாலையின் ஒருசிறிய பகுதியைமுதியவர் இல்ல செயற்பாடுகளுக்கு பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுசம்பந்தமாக வலிதென்மேற்கு பிரதேச செயலரும் வலிமேற்கு பிரதேச செயலக பதில் பிரதேச செயலருமான வேதநாயகத்திற்கு மேற்படி இல்ல அதிகாரிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரி தீவுப்பகுதியில் இவர்களுக்கான இடவசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவ் இல்லம் இடமாற்றப் படுமானால் ஊழியர்கள் சேவைபுரிவதில் பலத்தசிரமம் ஏற்படும் என அந்நிலைய ஊழியர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (க-45)

## தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி அருள்மிகு வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் தீர்த்தோற்சவம் எதிர்வரும் 30 ஆம்திகதி காலை 6மணிக்கு நடைபெறும். (த)

## யாழ். வர்த்தக வங்கியினர் நியமனம் கோரும் வழமையல்ல

### முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக வங்கியின் யாழ். கிளையினர் வங்கி நியமனத்திற்கு விண்ணப்பங்கள் கோரவில்லை என்றும் அவ்வாறு கோருவது வழமை...

...கொண்டு முறையிட்டபோது அவர்களின் குறையினைக் கூட்டாக எழுத்துருவில் சமர்ப்பிக்கக் கேட்டிருந்தார் முகாமையாளர். இருந்தும் எவரும்...

வேறு பிரதேச செயலர்களால் வழங்கப்படமாட்டா தென்பதையும் பிரதேச செயலர் அறியதந்துள்ளார்.

[உ-14]

| | |
|---|---|
| 152974 ஏ | 152997 ஏ |
| 153063 ஏ | 153063 பி |

நல்லூர்

| | |
|---|---|
| 142918 ஏ | 142918 பி |
| 142918 சி | 149937 ஏ |

| | |
|---|---|
| 153455 பி | 153455 சி |

(நா-சு)

# குருநகர், அரியாலை மக்களுக்கு 2000ரூபாவை உடன்வழங்கவும்

## டக்ளஸ்எம். பி. கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை அரியாலை ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக இரண்டாயிரம் ரூபாவை வழங்குமாறு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா யாழ். பிரதேச செயலரைக் கேட்டுள்ளார்.

இப்பகுதி மக்கள் தற்போது இடம் பெயர்ந்து வலி.மேற்குப்பகுதியில் தங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வேலை இழந்தவர்களுக்கு உதவ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நடவடிக்கை

(வடமராட்சிகிழக்கு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலையிழந்து பாதிக்கப்பட்டுள்ளவர்களிற்கு உதவும் முகமாக யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கடந்த காலப்பகுதிகளில் அரசியல் பழிவாங்கலினாலும் யுத்த அனர்த்தங்களினாலும் வேலை இழந்தவர்களுக்கும், அமைய ஊழியர்களாக கடமையாற்றி இடைநிறுத்தப்பட்டவர்களுக்கும், பலவருடங்களாக நிரந்தர நியமனம் கிடைக்காதவர்களிற்கும் இந்நடவடிக்கையில் முன்னுரிமை வழங்கப்படும்.

இவ்வாறான பல்வேறு சந்தர்ப்பங்களில் வேலையிழந்து பாதிக்கப்பட்டவர்கள் அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் முழுவிபரங்களுடன் பொதுஜனஐக்கிய முன்னணி அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(த-43)

# கணனி சான்றிதழ்கள் வழங்கல்

[வடமராட்சி]

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிறப்பு, இறப்புப்பதிவு சான்றிதழ்கள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பதிவாளர்களிற்கு புதிய கணனி மயப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து வரும் காலங்களிலும் கணனி மயப்பட்ட விபரப்பட்டியலே வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-43)

# தேயிலை விலை அதிகரிப்பு

(கோப்பாய்)

தனியார் கடைகளில் தேயிலையின் விலை தற்போது வெகுவாக அதிகரித்துக் காணப்படுவதாகவும் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளையில், தரமற்ற தேயிலைவிற்கப்படுவதாகவும் இத் தேயிலையைப் பாவித்து தயாரிக்கப்படும் தேநீர்சுவையற்றதாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-39)

வர்த்தக வங்கியின் யாழ். கிளையினர் வங்கி நியமனத்திற்கு விண்ணப்பங்கள் கோரவில்லை என்றும் அவ்வாறு கோருவது வழமையில்லை என்றும் மேற்படி வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தலைமை வங்கியால் கோரப்பட்டு விண்ணப்பித்தோருக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் போக்குவரத்துச் சீரின்மையால் பரீட்சை முடிவுற்றநிலையிலேயே வந்து சேர்ந்தன.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ். கிளைவங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு முறையிட்டபோது அவர்களின் குறையினைக் கூட்டாக எழுத்துருவில் சமர்ப்பிக்கக் கேட்டிருந்தார் முகாமையாளர். இருந்தும் எவரும் உரிய குறைபற்றி முறைப்பாட்டை இற்றை வரை சமர்ப்பிக்கவில்லை. யாழ். வங்கிக்கு நியமனம் பற்றிய எதுவித தொடர்பும் இல்லை.

# மாதாந்த உதவிப்பணம்

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான மாதாந்த பொதுசன உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

[உ-14]

# தென்னை உற்பத்தி அதிகரிப்பு தேங்காய்கள் தேக்கம்

(தென்மராட்சி)

குடா நாட்டில் தேங்காய் உற்பத்தி முன் எப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாக தென்னை அபிவிருத்திச் சபை வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

தென்மராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டங்களில் தேங்காய் மிதமிஞ்சிக் காணப்படுகிறது மாவட்டத்தின் மொத்தத் தேங்காய் தேவையை இப்போது எழுதுமட்டுவாள் கொடிகாமம் பகுதிகளே கூடியளவு நிறைவு செய்து வருவதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் கொப்பறா மூலம் தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து தினசரி 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட தேங்காய்கள் மாவட்டத்துக்குள் வருகிறதாகவும் தெரியவருகின்றது.

(வ-77)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## அன்னதானம்

நாளை சனிக்கிழமை இடம் பெறும் மாவைக் கந்தனின் தேர்த் திருவிழாவின் போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களினால்வழமை போல்இம்முறையும் அன்னதானம் வழங்கப் படுமென மாவைக் கந்தன் அன்னதான சபையின் செயலாளர்வி. மகேஸ்வரநாதன் அறிவித்துள்ளார். -ந-

### தமிழ் மக்களுக்காக உழைக்க

# விடுதலைப் புலிகளின் தலைவர் முன்வந்தால் போட்டிஅரசியலிலிருந்துஒதுங்கத்தயார்

### டக்ளஸ் எம். பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழ் மக்களின் நலன்களை முன் நிறுத்தி உழைக்க முன் வந்தால் போட்டி அரசியலில் இருந்து நான் ஒதுங்குவதற்கு தயாராகவுள்ளேன்" என நேற்றைய தினம் யாழ் மக்களைப் பிரதிநிதித்துவபடுத்தும் பிரதிநிதிகள்மத்தியில் உரையாற்றிய ஈ.பி.டி.பியின் செயலாளர்நாயகமும் பாராளுமன்றஉறுப்பினருமானகே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்றைய தினம் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அரசஅதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேசசெயலாளர்கள், கல்வி வலயப் பணிப்பாளர்கள், மாநகர சபை ஆணையாளர், பிரதேச சபைத் தலைவர்கள், பெற்றோலியக்கூட்டுத்தாபன அதிகாரிகள் மற்றும் பல்வேறு கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் ஐ. தே.க. பொதுஜன ஐக்கிய முன்னணியின் இணக்கப்பாட்டின் மூலம் ஒருகோடு போட்டுள்ளனர், இதில் பல நெளிவுகள் உண்டு இதைநிவர்த்தி செய்து நெளிவுக்கோட்டை நேராக்கிப் பயன்படுத்துவதில் தான் வெற்றி தங்கியுள்ளது.

இதில் சில பிரச்சினைகள் உண்டு அதில் முதலாவதாக வடக்குக்கிழக்கு இணைப்பா அல்லது பிரிப்பா என்பதுதான் பிரிப்பை எல்லா தமிழ்க்கட்சிகளும் எதிர்க்கின்றன.

எமது நிலைப்பாடு இணைப்பு தற்காலிகமாகத் தொடரட்டும் பத்துவருடங்களின்பின்னர் தீர்மானிக்கலாம்,

நிலப்பறிப்புகள் தொடர்பாக கல்லோயாபற்றி பேசிய நாம் இன்று பலாலிபற்றி பேசவேண்டிஉள்ளது.

எமக்குவந்த பல சந்தர்ப்பங்களை இழந்துள்ளோம். இச்சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்தியிருந்தால் யுத்தத்திற்கு முடிவுகண்டிருக்கலாம். எனவே சமூகத்தின் பிரமுகர்கள் என்றவகையில் எனதுகருத்தை உங்கள் முன்வைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

**யாழ் விஜய நோக்கம்**

எனது யாழ்விஜயத்தின் முக்கிய நோக்கம் மக்கள் நாளாந்த வாழ்வில் எதிர் கொள்ளும் குறைபாடுகள், பிரச்சினைகளை கண்டறிவதும், அரசியல் நிலைப்பாடுகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்துவதும் தான்.

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தைஐ.தே.க.எதிர்த்த போதிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது எனவும் தெரிவித்தார்.

### இடம்பெயர்ந்தோருக்கான

## இரண்டாயிரம் ரூபா நேற்று ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் வழங்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி, மருதங்கேணி, பளை, மாசார் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான இரண்டாயிரம் ரூபா முதற்கட்ட கொடுப்பனவு ஈ. பி. டி. பி. தலைமைக் காரியாலயத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஈ. பி. டி. பி யின் செயலாளர் நாயகம் ஏனைய இடம்பெயர்ந்த மக்களுக்கும் இக்கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும். இதற்கான நடவடிக்கையை எதிர்வரும் 5ம் திகதிக்கு முன்னர் எடுக்குமாறு பிரதேச செயலர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

சுமார் இருபதாயிரம் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி யாழ். செயலகத்திற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [௯-௦3]

### யுத்த அனர்த்தத்தால்

## 7 ஆயிரத்து 67 ஹெக்டயர் நிலப்பரப்பு கைவிடப்படும் அபாய நிலையில்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி அனர்த்தங்களின் காரணமாக சமீப காலத்தில் சுமார் 7 ஆயிரத்து 67 ஹெக்டயர் பயிர்செய் நிலம் கைவிடப்பட்டுள்ளது.

அப்பகுதியில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகள் காரணமாக, இவ்வருட ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக கைவிடப்பட்டு தற்போது முற்றாகவே விவசாயச் செய்கை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 683 ஹெக்டயர் நெல் வயல்களும் 298 ஹெக்டயர் மேட்டு நிலப் பயிர்செய்கையும் ... யர் மேட்டு நிலமும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 4271 ஹெக்டயர் வயல் நிலமும் 840 ஹெக்டயர் மேட்டு நிலமும் செய்கைக்கு உட்படுத்த முடியாத நிலையை அடைந்துள்ளது. (உ)

## பாடசாலைகளுக்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அனைத்து அரசாங்கப் பாடசாலைகளும் இன்று 28ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக

# சங்கேமுழங்கு

## எங்கள் தொல்லை தீருவதெப்போ?

சக்தி பீடம், மணிபல்லவம் என்றெல்லாம் புகழ்ந்துரைக்கப் படும் நயினாதீவு மக்களின் அவலம் தீர்வது எப்போது.

நயினாதீவு வடக்கிலே ஆலயத்திற்கான இறங்கு துறையும் தெற்கிலே வங்களாவடி எனப்பெயர் பெறும் இறங்கு துறையும் உண்டு. அதிகம் பிரயாணம் செய்யும் துறை இவ்வங்களாவடியாகும்.

படகுச் சேவை காலை, மாலை இருவேளை நடைபெறுகிறது. 10 ரூபாவாக இருந்த படகுக்கட்டணம் 15 ரூபாவாக உயர்ந்து விட்டது. 10 ரூபாவே அதிகம் என்ற நிலையில் இக் கட்டண உயர்வு நியாயப்படுத்த முடியாததொன்று.

8 வட்டாரங்கள் கொண்டது நயினாதீவு. மத்தியில் 5 ஆம் வட்டாரத்தில் வைத்தியசாலை உண்டு ஆயினும் வைத்திய சேவை பூரணமாக இல்லை.

படகுச் சேவைவடக்குக்கு நடத்தும் அதேவேளை வங்களாவடித் துறைக்கும் நிகழ்ந்தால் மக்களின் இன்னல் பெருமளவு குறைக்கப்படும்.

2½ மூன்று மைல் தூர முள்ளசிறிய இடத்தில் வேறு போக்குவரத்து வசதி இல்லாதிருப்பதால் மாட்டு வண்டி யென்றால் 150 ரூபா கொடுத்துப் போக நேரிடும். அல்லாத விடத்து மூட்டை முடிச்சுக்களுடன் கதிர்காம யாத்திரை தான். வேடிக்கையும், வேதனையும் என்னவென்றால் வயோதிபர், நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார் கால் நடையாகவே வடக்குத் துறையிலிருந்து வருந்தி நடக்க வேண்டியிருக்கிறது.

விளைபொருட்கள் எடுத்துச் செல்வதும் சிரமமும் நட்டத்தை ஏற்படுத்துவதுமாகும்.

சிவில் நிர்வாகம் நடத்துபவர்கள் மக்களின் கஷ்டங்களை உணர வேண்டும். 10, 15 நிமிடங்களில் வடக்குத் துறையிலிருந்து வங்களாவடிக்கு செல்ல முடியும். சுங்கடையினர் பரிசோதனை செய்த பின் அக்களை உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லலாம்.

வரலாற்றுப் பெருமை மிக்க இப் புண்ணிய பூமியில் கண்ணியம் தழைக்க வேண்டாமா? பல இன மக்கள் வந்து போகும் நிலப்பரப்பு இங்குள்ள மக்களின் நிம்மதிக்கு வகைசெய்ய சம்பந்தப்பட்டவர்கள் உளங்கொள்ள வேண்டும். அடிப்படை வசதிகள் பெற்ற மக்கள் உய்தியடைய வேண்டும். போக்குவரத்தும், தசாப்தம் தசாப்தமாக திருத்தப்படாத தெருக்களும் திருத்தப்பட வேண்டும். மணிபல்லவம் அழகாக வேண்டும். சாத்தனார் சாந்தமடையட்டும், சம்பந்தப்பட்டோர் விழிப்படையட்டும்.

சாம்பசிவன்.

★ ★ ★ ★ ★

## ஆங்கில ஆசிரியர் தெரிவில் நாம் புறக்கணிக்கப்படுவதா?

தகுதிகாண் பரீட்சை மூலமே நாம் தேர்ந்தெடுக்கப்பட்டோம் மேலும் எம்மவரில் நீண்ட அனுபவம் கொண்டோர் மிகப்பலருண்டு இருந்தும் நடைபெறும்

## இன்றும் நாளையும் சமுகமளிக்கவும்

தென்மராட்சி, பளைப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில்வதியும்க. பொ. த (உ/தரப்) பரீட்சை 2000ற்கு தோற்றும்பரீட்சார்த்திகளின் வசதி கருதி விசேட பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு பரீட்சை ஆணையாளர் இணங்கியுள்ளார் பரீட்சை நிலையங்களை அமைப்பதற் அவசிய விபரங்களைச் சேகரிக்க வேண்டியுள்ளமை

★ ★ ★ ★ ★

# ஆங்கில ஆசிரியர் தெரிவில் நாம் புறக்கணிக்சப்படுவதா?

தகுதிகாண் பரீட்சை மூலமே நாம் தேர்ந்தெடுக்கப்பட்டோம் மேலும் எம்மவரில் நீண்ட அனுபவம் கொண்டோர் மிகப்பலருண்டு இருந்தும் நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் ஆங்கில ஆசிரியர் நியமனத்தில் நாம் புறக்கணிக்கப்பட்டோம் ஏன்? என்ற கேள்வி எம்முன் எழுகின்றன. ஆனால் காரணம் அறியோம்.

ஆங்கில ஆசிரியர் நியமனத்தில் தேர்ந் தெடுக்கப்பட்டோர் க.பொ.த உயர்தரத்தில் கலை, வர்த்தகம் போன்ற பாடங்களில் மிக இலகுவாக உயர் புள்ளி பெற்றவர்கள் மேலும் எம்மவரால் வெற்றி கொள்ளப்பட்ட ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சையில் தோற்றுப்போனவர்கள். மேலும்தொண்டராசிரியருக்கு கிடைக்கப் பெற்ற நிரந்தர நியமனத்தில் ஆங்கில ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிற்க! நாம்வலியுறுத்தவிரும்புவதுயாதெனில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் க. பொ. த உயர்தரத்தில் வெட்டுப்புள்ளிகளில் மிகக் குறைந்தவர்களும் காணப்படுகின்றனர். அதே வேளையில் பல்கலைக்கழகத்தில் பயின்ற, பயிலுகின்ற பட்டதாரிகளும் காணப்படுகின்றனர். இப் பட்டப் பயிலுநர் ஆங்கிலத்தை கனவிலும் பொருட்டாக நினையாதவர்கள் ஆனால் இன்று தமது தமிழ்மொழி மூல க.பொ.த உயர்தர பரீட்சையின் வெட்டுப்புள்ளியின் உதவியுடன் இவர்கள் ஆங்கில மொழியின் உலகை வேரறுக்கத் துணிந்தவர்கள்.

நாம் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள். இலவு காத்த கிளிபோல் காத்திருந்து காத்திருந்து பொறுமை இழந்தோம்: நாம் ஏன் புறக்கணிக்கப்பட்டோம் என்பது இன்று வரை அறியப்படாத உண்மை. உண்மைகள் வெளிச்சத்திற்கு வருமா? இல்லை எம்மவர் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் வேள்வித் தீயில் வேகுவதா? எமக்கு என்ன பதில்? ஆங்கில உலகத்திற்கு என்று விடிவு? கூறுங்கள் எம்மேன்மையானவர்களே.

—நன்றி—

-பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்-

யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில்வதியும்க. பொ. த (உ/தரப்) பரீட்சை 2000ற்கு தோற்றும்பரீட்சார்த்திகளின் வசதி கருதி விசேட பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு பரீட்சை ஆணையாளர் இணங்கியுள்ளார் பரீட்சை நிலையங்களை அமைப்பதற் அவசிய விபரங்களைச் சேகரிக்க வேண்டியுள்ளமையால் இந்நிலையங்களில்பரீட்சைக்குதோற்றவிரும்பும்பரீட்சார்த்திகளைஇன்றுவெள்ளிக் கிழமை யா/கொக்குவில் இந்துக்கல்லூரியின் தற்காலிகமாக இயங்கி வரும் யாழ்வலயக் கல்விப் பணிமனையிலும் நாளைசனிக்கிழமையா/வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலையிலும் விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

பரீட்சை அனுமதி அட்டைகளை தவறாது சமர்ப்பித்தல் வேண்டும் (வ)

## திரைப்படக் கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் சேரி வால்வைச் சித்தரிக்கும் மீரா நாயரின் ''சலாம் பம்பாய்'' (ஹிந்தி) எனும் வீடியோ திரைப்படக்காட்சி நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை அறை இலக்கம் 2 இல் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் வருகை தரமுடியுமென இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ணமாக, இவ்வருட ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக கைவிடப்பட்டு தற்போது முற்றாகவே விவசாயச் செய்கை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 683 ஹெக்டயர் நெல் வயல்களும் 298 ஹெக்டயர் மேட்டு நிலப் பயிர்செய்கையும் பாதிப்புற்றுள்ளன.

இதேபோல், பளைப் பிரதேசத்தில் 813 ஹெக்டயர் வயல் நிலமும் 298 ஹெக்ட

## பாடசாலைகளுக்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அனைத்து அரசாங்கப் பாடசாலைகளும் இன்று 28ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக மூடப்பட்டு அடுத்தமாதம் 30ஆம் திகதி மீண்டும் மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)


## வில்லூன்றி புனிததீர்த்தம்

## ஆடி அமாவாசைப் பெருவிழா

30. 07. 2000 ஞாயிற்றுக்கிழமை

★ தீர்த்தோற்சவம்

காலை 6-45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8-00 மணி தீர்த்தவாரி
காலை 9 மணி முதல் 10 மணி வரை தீர்த்தக் கட்டத்தில் அனுக்கிரகம்
காலை 10 மணி சுவாமி கோவிலுக்கு எழுந்தருளல்

★ பிதிர்க்கடன்

காலை 8-15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தம் ஆடவும், பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும்விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை வில்லூன்றி தேவஸ்தானம்
பரிபாலன சபை வில்லூன்றி புனித தீர்த்தம்
(1598)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# பொதுஅறிவுவினாக்கள்

## இல. 15 தொகுப்பு:- யூட்

1. காலை நேர அமைதி நாடு எது?
2. யோகாசனத்தை கண்டுபிடித்தவர் யார்?
3. இஸ்ரேலிய உளவு தாபனத்தின் பெயர் என்ன?
4. K. L. M எந்த நாட்டின் விமான நிறுவனம்?
5. எகிப்திய தேசிய தினம் கொண்டாடப்படும் நாள் எது?
6. ஜப்பானின் மக்கள் பிரதிநிதிகள் கூடும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?
7. பங்களாதேஷ் பிரதமரின் பெயர் என்ன?
8. கராச்சி நகரம் எந்த நாட்டில் உள்ளது.
9. மொசப்பத்தேமியா நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
10. யூலை 28ம் திகதியை என்ன நாளாக ஐ. நா பிரகடனம் செய்துள்ளது?
11. லிபியா நாட்டின் நாணயத்தின் பெயர் என்ன?
12. இந்திய அதி உயர் விருதின் பெயர் என்ன?
13. 1-ம் உலகப் போர் எப்போது ஆரம்பமானது?
14. சார்க் அமைப்பின் 1-வது மகாநாடு எந்நாட்டில் இடம் பெற்றது?
15. சர்வதேச தொலைத் தொடர்பு அமைப்பின் தலைமை அலுவலகம் எங்குள்ளது?
16. மனிதன் முதன் முதலாக எப்போது விமானம் மூலம் உலகை வலம் வந்தான்?
17. அண்மையில் ஜி-8 மகாநாடு எந்நாட்டில் நடைபெற்றது?
18. முதலாவது சர்வதேச தென்னை மகாநாடு எங்கு இடம் பெறுகின்றது?
19. சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அலுவலகம் எங்குள்ளது?
20. லிஸ்பன் எந்நாட்டின் தலை நகரம் ஆகும்?
21. சீனப் பெரும் சுவர் எப்போது கட்டப்பட்டது?
22. உலகிலே மிகப் பெரிய பூங்கா எங்குள்ளது?
23. வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் எத்தனை?
24. இலங்கையின் தேசிய மலர் எது?
25. ஐக்கிய அமெரிக்காவின் தேசிய தினம் எப்போது?
26. கியூபா நாட்டின் தலை நகரின் பெயர் என்ன?
27. இயந்திரத் துப்பாக்கியைக் கண்டு பிடித்தவர் யார்?
28. 2001ம் ஆண்டு தமிழ் இணைய மகாநாடு எந்நாட்டில் நடைபெறும்?
29. புக்கர் எந்நாட்டின் இலக்கியப் பரிசு?
30. மிக அடர்த்தியான கோள் எது?
31. செவ்வாய்க் இரகத்திலிருந்து தொடர்பை பூமிக்கு ஏற்படுத்த எடுக்கும் காலம் எவ்வளவு?
32. ஓமானில் அதிகமாக வாழும் மக்களில் அதிகமானோர் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள்.
33. நியூட்டன் குழியின் ஆழம் எவ்வளவு?
34. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்புச் சேவை எப்போது ஆரம்பமானது?
35. U. P. U என்றால் எந்த உலக தாபனத்தை குறிக்கிறது?
36. விண்வெளி அறிவியலின் தந்தையின் பெயர் என்ன?
37. எவ்வாண்டில் ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் பங்கு கொண்டனர்?
38. சமாதான குறியீடாக பயன்படுத்தப்படும் இலை எது?
39. ஒளி வருடம் எத்தனை கிலோ மீற்றர் தூரத்தை

# சமாதான நீதவான் பட்டத்திற்கு தமிழர் எவரும் தகுதியில்லையா?

## சம்பந்தப்பட்டோர் விசனம்

(கொழும்பு)

இலங்கை மத்திய சுகாதாரம் மற்றும் சுதேசிய அமைச்சு அண்மையில் 274 சுதேச வைத்தியர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் வழங்கியிருந்தது. அதில் ஒருவர் கூட தமிழ், முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர் இல்லையென சம்பந்தப்பட்டோர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நாடுமுழுவதிலும் உள்ள சுதேச வைத்தியர்களில் பிரபல்ய மானவர்களை தெரிவு செய்து சமாதான நீதவான் பட்டம் வழங்கப்படும் என்ற மேற்படி அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து பெருமளவு தமிழ், முஸ்லிம்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் எவருக்கும் மேற்படி பட்டம் வழங்கவில்லையெனவும்தாம்அப்பட்டத்திற்கு தகுதியானவர்கள் இல்லையா என்றும் பாதிக்கப்பட்டோர் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆயுள்வேத திணைக்களமும் சித்த மற்றும் யூனானி வைத்தியர்களின் பெயர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# படையினரின் சூட்டிற்கு விடுதலைப்புலி உறுப்பினர் பலி

[மட்டக்களப்பு]

படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிய விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் எனக் கருதப்படும் இளைஞன் ஒருவரின் சடலம் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி கபூறடி வீதியில் பாழடைந்த வீடு ஒன்றில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மேற்படி நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதாக படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

படைத்தரப்பு இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

மேற்படி வாலிபரைத்துரத்தி வந்த போது கபூறடி வீதியில் உள்ள பாழடைந்த குடிசைக்குள் புகுந்தவாலிபன் படையினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள ஆரம்பித்த போது படையினர் திருப்பித் தாக்கியதில் மேற்படி வாலிபர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடுதலைப்புலி உறுப்பினரிடம் இருந்து கைத்துப்பாக்கி, கிறினட், சயனைட் குப்பி என்பன படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-60)

# ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு வில்லூன்றியில் விரிவான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினத்தை அனுஷ்டிக்க வில்லூன்றியில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை முதல் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.

தொடர்ந்து வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த வாரியும் பக்த அனுக்கிரகமும் நடைபெறும். அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது,

அடியார்களின் நன்மை கருதி தீர்த்தக்கேணி இறைத்துத் துப்பரவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க)

# பொது அறிவு வினா இல. 14 இற்கான

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

01) சி. சயந்தன், வட்டுக்கோட்டை
02) சி. சுஜீகரன், கச்சாய்
03) த. சுமிதா, கரவெட்டி
04) கே. பிரியதர்ஷினி, சுதுமலை
05) பே. அருள்ராஜ், பருத்தித்துறை
06) சி. தாட்சாயினி, நல்லூர்
07) இ. காயத்திரி, கொக்குவில்
08) உ. அனித்தா, உரும்பிராய்
09) வே. கிருஷாந்தி, நல்லூர்
10) பி.சதீஸ்வரன், கல்வியங்காடு
11) சி. சிவத்திரன், திருநெல்வேலி
12) பா. கருணாகரன், சித்தங்கேணி
13) பு. கஜேந்திரன், நெல்லியடி

# நாளை ஆங்கிலதினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கான வலய மட்ட ஆங்கில தினப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்களுடைய ஆங்கிலப் பாடப் புத்தகத்துடனும், மதிய போசனத்துடனும் சமூகமளிக்கும் படி தென்மராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(த)

# மிதிவெடியில் கால் இழப்பு

37. எவ்வாண்டில் ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் பங்கு கொண்டனர்?
38. சமாதான குறியீடாக பயன்படுத்தப்படும் இலை எது?
39. ஒளி வருடம் எத்தனை கிலோ மீற்றர் தூரத்தை கொண்டது?
40. இலங்கையின் பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் எவ்வளவு?

---

**குறிப்பு:-**

இதற்கான விடைகளை 03 - 08 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

---

## அறிவியல் பகுதி வினா இல. 15

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்;

08) [illegible]
09) வே. கிருஷாந்தி, நல்லூர்
10) பி.சதீஸ்வரன், கல்வியங்காடு
11) சி. சிவத்திரன், திருநெல்வேலி
12) பா. கருணாகரன், சித்தங்கேணி
13) பு. கஜேந்திரன், நெல்லியடி
14) தெ. விமலேந்திரன், கொக்குவில்
15) க. வக்ஷலா, நல்லூர்
16) அ. சசிக்காந்தன், கட்டப்பிராய்
17) சு. ஜோன்சன், குருநகர்
18) நி. கம்ஷா, மானிப்பாய்
19) போ. நிஷாந்தன், கொட்டடி
20) சி. அனுஷா, வட்டுக்கோட்டை
21) தெ. பிருந்தா, ஊரெழு
22) நா. சுதர்ஷன், யாழ்ப்பாணம்

# விடைகள்

## பொது அறிவு வினா இல. 14

1) கோப்பன் ஹேகன்
2) கோணாக்றி
3) சியூவா
4) போண்
5) அல்ஜியேஸ்
6) டொய்ஸ் மார்க்
7) பெல்ஜியன் பிராங்
8) ரூபியா
9) பவுண்ட்
10) புதிய தினார்
11) ஷோரா
12) பாகிஸ்தான்
13) பிறேசில்
14) 7 நிமிடம் 31 வினாடி
15) வெள்ளி
16) டெய்மோஸ், போபோஸ்
17) காணமீட்
18) 104 நிமிடங்கள்
19) துருக்கி
20) எஹிட் பராக்
21) லூனா 9 ரஷ்யா
22) ஆப்பிள்
23) ரஷ்யாவிலிருந்து
24) ஜேர்மனி
25) ஐரோப்பா
26) ஜம்மா மசூதி
27) லாக்டோ மீற்றர்
28) அல்வின் கிராஸில்
29) சிக்காகோ
80) பேர்ஷியா
31) அமெரிக்கா
32) டார்லிங்
33) அமோனியம் குளோரைட்டு
34) ஏன்ஸ் — 1908
85) அஸ்ரா லைல கதிர்
36) Adreno Cortice Trophic Hormone
37) 1912
38) அங்கோர்
39) அவுஸ்ரேலியா
40) பர்மா

## மிதிவெடியில் கால் இழப்பு

(வவுனியா)

கிளிநொச்சி திருநகர் பகுதியில் நேற்று மிதிவெடி ஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் தனது வலது காலை இழந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

திருநகரைச் சேர்ந்த சின்னராஜா சுவன்ரஜ் (வயது-17) என்பவரே மேற்படி சம்பவத்தில் காலையிழந்தவராவார். (7-4)

## வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியின் குருநகர் களஞ்சியத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவ வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 7வது சாட்சியான உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆரியவன்ச நீதிமன்றத்திற்கு சமூகம் கொடுக்காமையால் இன்று வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதிவான் ப. சுப்பிரமணியம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (வ-12)

### இன்று ஒரு தகவல்

## "புத்தியுடையோர் வாழ்வில் வெற்றியடைவர்"

அந்த ஊரின் எல்லைப்புற ஆற்றங்கரையில் ஒரு முதலை வசித்து வந்தது. அவ் ஆற்றங் கரையைச் சுற்றி நாவல் மரங்களும், மருதமரங்களும் நிறைந்திருந்தன.

சில நாட்கள் சென்றன. ஆற்றங்கரையிலுள்ள நாவல் மரங்களெல்லாம் பூ பூத்து காய் காய்த்தன. அந்த ஆற்றங்கரையின் மேற்பரப்பு நீருக்கு வந்து முதலை சுவாசிப்பது வழமை.

ஒருநாள் முதலை அவ்வாறு மேற்பரப்பிற்கு வந்தவேளை நாவல் மரங்களின் காய்கள் எல்லாம் கனியாகியிருந்ததையும். அக்கனிகளை ஒரு குரங்கு ருசித்து உண்டு கொண்டிருந்ததினையும்கண்டது.

முதலையைக் கண்ட குரங்கு "உனக்கும் நாவற்பழம் வேண்டுமா" என்று கேட்டது. முதலையும் 'ஆம்', என்றது. குரங்கு நாவல்ப் பழங்களை முதலைக்கு பிடுங்கிக் கொடுத்தது.

அதன் பின்பு குரங்கு அந்த நாவல் மரத்தில் பழம் பறிக்கும் போதெல்லாம் முதலைக்கும் பறித்துக்கொடுக்கும்.

அதனால் குரங்கும், முதலையும் இனிய நண்பர்கள் ஆயினர். ஒவ்வொரு நாள்ப் பொழுதையும் இருவரும் ஒருவரோடு, ஒருவர் உரையாடி இனிமையாகக் களித்தனர்.

ஒரு நாள் முதலை, குரங்கு தந்த பழங்களைக் கொண்டு போய் மறுகரையில் இருந்த தன்னுடைய மனைவியிடம் கொடுத்தது. அதனைப் புசித்த முதலையின் மனைவி "ஆகா இந்த நாவல்ப்பழங்கள் இத்தனை இனிமையானவை ஆயின் அதனைத்தினமுண்ணும் அந்தக் குரங்கின் இதயம எத்தனை இனிமையாக இருக்கும் எனச் சிந்தித்தது. அடுத்த கணமே "முதலையிடம்" நீங்கள் உங்கள் குரங்கு நண்பனின் இதயத்தை எனக்குக் கொண்டு வந்து தரவேண்டும் என்றது.

அதற்கு முதலை 'ஐயோ! அவன் மிகவும் நல்லவன் என் இனிய நண்பனுங்கூட அதனால் எப்படி அவனிடம் இதயத்தைக்கேட்பது' என்றது.

உடனே பெண்முதலை 'நீங்கள் அவரை எங்கள் வீட்டிற்கு விருந்துக்கு வருமாறு அழைத்து வாருங்கள்' என்றது. முதலைக்கு இருபக்கமும் இடி. ஒருபக்கம் அன்பு மனைவி. மறுபக்கம் இனிய நண்பன். ஆயினும் மனைவியின் பாசம் மேலோங்க குரங்கினைக்காண ஆற்றங்கரையின் மறுகரைக்குச் சென்றது. குரங்கு நாவல் மரத்தில் இருந்து முதலையின் வரவிற்காய் காத்திருந்தது.

வந்த முதலை மிகவும் சந்தோஷமாக 'உன்னை இன்று என்வீட்டிற்கு விருந்துக்கு அழைத்துவருமாறு என் மனைவி' கூறினாள். எனவே 'நீ என் அழைப்பினை ஏற்று என்னோடு வா' என்று அழைத்தது.

குரங்கும் "இந்தஆற்றை என்னால்க் கடக்க முடியாதே" என்றது.

உடனே முதலை 'என்முதுகில் ஏறிக்கொள். நான் உன்னைச்சுமந்து செல்கிறேன்' என்றது.

குரங்கு ஏறியதும் முதலை புறப்பட்டது. ஆற்றின் நடுப் பகுதியைக்கடந்து சென்று கொண்டிருந்தபோது; முதலை 'உன்னை நான் எதற்காக அழைத்துவந்தேன் தெரியுமா? என்மனைவி உன்னுடைய இதயத்தைக்கொண்டு வரும்படிகேட்டாள். ஆதலால் அவளிடம் உன்னை அழைத்துப்போகிறேன்' என்றது.

உடனே புத்திசாதுரியக் குரங்கு, 'அட முட்டாள்ப் பயலே நீ இதனை முன்பே சொல்லியிருக்கலாமே. நான் எனது இதயத்தை நாவல் மரப்பொந்தினுள் அல்லவா வைத்துவிட்டேன் என்றது.

உடனே முதலை 'நான் உன்னைக் கரையில்கொண்டு போய் விடுகின்றேன். நீ அதனை எடுத்துத்தா' என்றது.

முதலை குரங்கை கரையில் கொண்டு வந்துவிட்டது. எட்டிப்பாய்ந்த குரங்கு நாவல் மரத்தில் ஏறி 'அடமுட்டாள் நண்பா யாரேனும் இதயத்தைக்கழற்றி பொந்தில் வைப்பார்களா?' உன்புத்தியும், நட்பும் ஒரேமாதிரியானவை.

முதலில் புத்தியைத்தீட்டி சாதுரியமாய் வாழப்பழகு. உன்நட்பும் இத்துடன் முடிவடையட்டும் என்றுகூறிச் சென்று விட்டது.

வாழ்க்கையை வளமோடும் வெற்றியுடனும்வாழவேண்டுமானால்நாம்புத்தியுடையோ

★ வவுனியாப் பகுதியில்

# காணாமல் போவோர் தொகை

# வெகுவேகமாக அதிகரிப்பு

## பொது மக்கள் விசனம்

(வவுனியா)

வவுனியாபகுதியில் காணாமல்போவோர் தொகைவெகு வேகமாக அதிகரித்து வருவதாகப்பொது மக்கள்மத்தியில் பலத்த விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பூந்தோட்டம், சிதம்பரபுரம், பாவற்குளம் போன்ற நகரங்களிலும் வவுனியா குட்ஷெட் வீதியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் இருந்த பெருமளவானவர்கள காணமல்போயுள்ளதாக பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் கடந்த 6 மாதங்களில் மட்டும் 17 பேர் இவ்வாறு காணாமல்போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள்யாரால் கைது செய்யப்படுகின்றார்கள், அவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர். என்பனபோன்றதகவல்கள்சம்பந்தப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் பெற்றோருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பது விதி முறையாகும்.

இவ் விதி முறைகள் வவுனியாவில் கடைப்பிடிக்கப்படுவதாக இல்லையென அப்பகுதி வாழ் பொதுமக்கள் மிகுந்த ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். (க)

வடமராட்சிப் பகுதி

## சிற்றூர்திகள் அச்சுவேலி மத்திய பஸ் நிலையமூடாக சேவை நடத்தத் தடை

(அச்சுவேலி)

வடமராட்சிப் பகுதியில் இருந்து போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள், அச்சுவேலி மத்திய பேருந்து நிலையமூடாக சேவையில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதி தனியார் சிற்றூர்தி உரிமையாளர்கள் சிலர் தமது வருவாயை அதிகரிக்கும் வகையில் அச்சுவேலி மத்திய பஸ் நிலையம் ஊடாக சேவையினை நடாத்திவந்தன.

இதனால் அச்சுவேலி மினி பஸ் சங்கத்தினரின் சேவைக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட இரு சிற்றூர்திச்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே அண்மையில் இடம் பெற்ற கலந்துரையாடலினால் மேற்கொள்ளப்பட்ட முடிவினையடுத்து வடமராட்சி தனியார் சிற்றூர்திகள் வழமைபோல் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் தமது சேவையினை நடத்தி வருவதை அவதானிக்க முடிகிறது. (உ-14)

மட்டுமாவட்டத்தில்

## வைபவங்கள் ஒத்திவைக்கப்படுவது வழமையான நிகழ்வுகள் ஆகிவிட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வைபவங்கள் ஒழுங்கு செய்யப்படுவதும் பிறபோடப் படுவதும் வழமையான நடவடிக்கையாகி வருவதாக பலரும் அதிருப்திவெளியிட்டுள்ளனர்.

வைபவரீதியாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு, நேரம் குறிப்பிடப் பட்டபின் சில மணி நேரங்களிற்கு முன் வைபவங்கள் ஒத்தி வைப்கப் படுவதால் அதிகாரிகளும், முக்கியஸ்தங்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இம் மாதம் ஆரம்பத்தில் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பவுணதீவு பஸ்டாப்போ பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட ஏற்பாடாகி இருந்தது. ஆனால் இது வேறு ஒரு திகதிக்கு திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழகை பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் தலைமையில் ஏற்பாடகி இருந்த மாவட்டஅபிவிருத்திக் குழுக்கூட்ட மும் திடீரென ஒத்தி வைப்பட்டது.

இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் தீடீர் திடீரென ஒத்தி வைக்கப்படுவது குறித்து பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (சு-60)

## பேராசிரியர் நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம)

பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் நினைவுச் சொற்பொழிவு ஆவணி மாதம் முதலாம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இரண்டு மணிக்கு ஆரம்பமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

" குற்றமனப்பாங்கிற்கான விஞ்ஞான விளக்கங்கள்" எனும தலைப்பில் முன்னை நாள் விஞ்ஞான பீடத்தலை

மத்திய கிழக்கில்

## பணிபுரியச சென்ற இல. யுவதிகள் சொந்த நாடு திரும்புவதில் நாட்டம்

(கொழும்பு)

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரக விடுதியில் தஞ்சம் புகுந்திருந்த 35 இலங்கை யுவதிகள் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்.

புகுந்திருந்த இவர்களை, உடனடியாகவே சொந்த நாட்டிற்கு அழைத்துவரும் வகையில், இலங்கையில் உள்ள வேலைவாய்ப்புப் பணியகம் கடவுச் சீட்டுக்

இதயத்தைக்கேட்பது' என்றது.

உடனே பெண்முதலை 'நீங்கள் அவரை எங்கள் வீட்டிற்கு விருந்துக்கு வருமாறு அழைத்து வாருங்கள்' என்றது. ''அப்படி நீங்கள் அழைத்து வரா விட்டால் நான் பட்டினி கிடந்து இறந்து விடுவேன்'' என்று உறுதியுடன் கூறியது.

உன்நட்பும் இத்துடன் முடிவடையட்டும் என்றுகூறிச் சென்று விட்டது.

வாழ்க்கையை வளமோடும் வெற்றியுடனும்வாழவேண்டுமானால்நாம்புத்தியுடையோராகவும்,சமயோசிதத்திறமையுடையவர்களாகவும் வாழப் பழகவேண்டும். அதுவே வெற்றியின் ரகசியம்(த)

தெனகச்சி சுவாமிநாதன்

மணிக்கு ஆரம்பமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

''குற்றமனப்பாங்கிற்கான விஞ்ஞான விளக்கங்கள்'' எனும் தலைப்பில் முன்னை நாள் விஞ்ஞான பீடத்தலைவரும் பேராசிரியருமான வி.கே. கணேசலிங்கம் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (த-3)

(கொழும்பு)

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரக விடுதியில் தஞ்சம் புகுந்திருந்த 35 இலங்கை யுவதிகள் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாகி, இலங்கைத் தூதரக விடுதியில் தஞ்சம் புகுந்திருந்த இவர்களை, உடனடியாகவே சொந்த நாட்டிற்கு அழைத்துவரும் வகையில், இலங்கையில் உள்ள வேலைவாய்ப்புப் பணியகம் கடவுச் சீட்டுக்களை அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று இன்னும் 43 இலங்கை யுவதிகள் இன்று அழைத்துவரப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

குவைத், சவூதி அரேபிய நாடுகளில் தொழில்புரியவெனச் சென்ற இலங்கை யுவதிகள் பலவித கொடுமைகளுக்கும் ஆளாகிய 643 பேர் நாடு திரும்பக் காத்திருப்பதாகவும்,

வெகுவிரைவில் அவர்களை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் இலங்கையில் உள்ள வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது;

(உ)

# கிழக்கில் நியூ ஈஸ்ரேன் கம்பனிக்கு 15 புதிய பஸ்கள் வழங்கப்பட்டன

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள நியூ ஈஸ்ரேன் பஸ் கம்பனிக்கு போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசியின் சிபார்சின் பேரில் 15 புதிய பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பல டிப்போக்களிற்கு பஸ்களும், இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக டிப்போ வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

(சு-60)

# இருகால்களும் இல்லாத வாலிபருக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் பதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதேச செயலர்பிரிவைச் சேர்ந்தஇரு கால்களும் இல்லாத வாலிபர் ஒருவருக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆறுமுகத்தான் குடியிருப்பு தம்பிமுத்து கமலநாதன் என்ற இளைஞனுக்கே பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் சிபார்சின் பேரில் சமுர்த்தி இளைஞர்விவகாரவிளையாட்டுத்துறை அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியுள்ள பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா மேற்படி இளைஞருக்கு வைபவம் ஒன்றில் இந்த நியமனத்திற்கான கடிதத்தை வழங்கியுள்ளார். (சு-60)

# தென்மராட்சி கூட்டுறவு ஊழியரின் சேமலாபநிதி; நம்பிக்கை நிதி என்பன மத்திய வங்கிக்கு அனுப்பப்படவில்லை

## ஊழியர்கள் மத்தியில் அதிருப்தி

(தென்மராட்சி)

தென்மராட்சி மற்றும் பளை பிரதேசங்களில் இயங்கிய சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தென்மராட்சி மேற்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பச்சிலைப்பள்ளிபனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் கடமையாற்றும் கூட்டுறவு ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) தொடர்பான கொடுப்பனவுகள் இலங்கை மத்திய வங்கிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியச் சபைக்கும் கடந்த மூன்று மாதகாலமாக அனுப்பப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதுவிடயம் குறித்து சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றி வருகின்ற நிரந்தர ஊழியர்கள் மிகவும் அதிருப்தியும் கவலையும் கொண்டுள்ளனர் என அறியப்படுகின்றது.

குறித்த கூட்டுறவுச் சங்கங்கள் தமது முழுமையான நிர்வாகத்தினை மேற்கொள்ள முடியாமல் இருந்துவருவதன் காரணமாக கூட்டுறவு ஊழியர்களுக்கானகுறித்தகொடுப்பனவுகளை உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்க முடியாத நிலை தொடர்வதாக சங்கங்களின் நிர்வாகங்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

[க-77]

# மேலதிகநீதவான் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மேலதிகநீதவானாக எம். அப்துல்கப்பூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக நீதிவானாக கடமையாற்றிய எஸ். சுரேந்திரன் கொழும்புக்கு இடம் மாற்றப் பட்டதை அடுத்தே இந்நியமனம் நிகழ்ந்துள்ளது.

(த-4)

**பிரான்ஸ்,**

# விபத்துக்கானகாரணம் கண்டறியும் வரை கொன்கோட் விமானசேவை நிறுத்தம்

(பாரிஸ்)

பிரான்ஸில் இருந்து புறப்படும் கொன்கோட் விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அந்நாட்டு போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரான்ஸில் இருந்து நியூயோர்க் நோக்கிப்புறப்பட்ட, பிரான்ஸ் தயாரிப்பு கொன்கோட் விமானமொன்று புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த 113பயணிகள் பலியானதையடுத்து மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேற்படி விமானம், விபத்துக்குள்ளானதற்கான சரியான காரணம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னே விமான சேவைக்கான அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானம் விபத்துக்குள்ளான காரணம் பற்றிய விரிவான விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் ஓரிருநாட்களில் கொன் கோட் விமானசேவை அனுமதி கிடைத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ)

# கோஷ்டி மோதலில் குண்டு வீச்சு இருவர் கொலை 8பேர் படுகாயம்

(சென்னை)

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோயில் கோஷ்டி மோதலில் நாட்டு எறிகுண்டுகள் வீசப்பட்டு 2பேர் கொல்லப்பட்டனர் 8பேர் படுகாயமடைந்தனர்.

சங்கரன் கோயில் ஊராட்சி மன்றத் தலைவர் குருசாமியும் அவரது ஆதரவாளர் மாரியப்பனும் இறந்தனர்.

படுகாயமடைந்த 8பேரும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(து)

**வட கொரியாவிற்கு**

# மனிதாபிமான உதவிகள் வழங்குவதில் தென்கொரியா ஆர்வம்

(சியோல்)

வட கொரியாவிற்கு ஒரு லட்சம் தொன் எடையுள்ள உர வகைகளைத் தென் கொரியா வழங்க முன் வந்துள்ளது.

மேலும் இது போன்ற மனிதாபிமான உதவிகளைதென் கொரியா வழங்க இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கடந்த மாதம் இரு நாட்டுத் தலைவர்களும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்புகளை ஏற்படுத்தியதன் விளைவாகவே இந்த உதவிகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடகொரியாவில் வரட்சி ஏற்படுமாயின் பலத்த உணவுத் தட்டுப்பாடு ஏற்படுமென்று ஐ. நா.சபை அறிவித்துள்ளது.

(து)

# மாதம் 5ஆயிரம் வெளிநாட்டவர் ஐரோப்பாவிற்குள் நுழைகின்றனர்

## சர்வதேச ஒன்றியம் அறிக்கை

(ஜெனீவா)

இலங்கையர் உள்ளிட்ட 5 ஆயிரம் வெளிநாட்டவர் பொஸ்னியா வழியாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மாதந்தம் சட்ட விரோத குடியேற்ற வாசிகளாக செல்வதாக ஜெனீவாவில் உள்ள சர்வதேச குடியேற்ற வாசிகள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவகையில், சட்ட ... காவல் கட்டுப்பாடுகள், குடிவரவு குடியகல்வு தொடர்பான இறுக்கமான சட்டங்கள் கடைப் பிடிக்கப் படாமையும் இதற்குக் காரணமென அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பொஸ்னியா ஊடாக செல்பவர்களில் பெரும் பாலானோர் ஈரான் நாட்டவர்கள் என்பதும் ஏனையோர் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா ...

# காம்டேவிட் பேச்சு முறிவையடுத்து தென்லெபனானில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

அமெரிக்கஅரசின் மத்தியஸ்தத்துடன் கடந்த இருவாரங்களுக்கும் மேலாக பலஸ்தீன, இஸ்ரேல் தலைவர்களுக்கிடையே நடைபெற்ற அமைதிப்பேச்சுக்கள் முறிவடைந்தமையைஎதிர்த்து, தென் லெபனானிலுள்ள ஆயிரக்கணக்கான பலஸ்தீன அகதிகள் ஆர்ப்பாட்டம்ஒன்றினை நடத்தியுள்ளனர்.

பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தோல்வி புதிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என சிரிய, லிபிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம், பேச்சு வார்த்தை முறிவுக்கு இஸ்ரேலின் விட்டுக்கொடுக்காத கொள்கைகளே காரணம் எனவும், யசீர்அரபாத் தன்னிச்சையாக பலஸ்தீன அரசைப் பிரகடனம் செய்ய வேண்டும் எனவும் அரபுப்பத்திரிகைஒன்று பலஸ்தீன அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது

எனினும், பலஸ்தீன இஸ்ரேல் நாடுகளின் சார்பு நாடுகள் தத்தம் ஆதரவு நாட்டுக்கு சார்பாக குரல் கொடுப்பதோடல்லாமல், மத்தியகிழக்கு பிரச்சினையை மேலும் பெரும்பிரச்சினையாக உருவாக்கும்முயற்சியில் ஈடுபட்டுவருவதாக அரசியல் நோக்கர்கள் சிலர்கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

எது எவ்வாறிருப்பினும் நீண்டகால மத்தியகிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்பட்சத்தில் தமது உறுதியற்ற வாழ்வுவளம்பெறும் எனும் நம்பிக்கையோடு காத்திருந்த இஸ்ரேல், பலஸ்தீன மக்களுக்கு இதுஒரு பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## செய்திப்பரல்

★ வியட்நாமில் பெய்த தொடர் மழையினால் 33 பேர் உயிரிழந்துள்ளனர்

★ காஷ்மீர் கிளர்ச்சிவாதக் குழு ஒன்றுயுத்த நிறுத்தம் மேற்கொண்டதை பிரதமர் வாஜ்பாய் வரவேற்றுள்ளார்

★ ஆசியக் கிண்ணத்துக்கான 17 வயதிற்குட்பட்டகிறிக்கெட்போட்டியில் இலங்கை அணி வென்றுள்ளது.

★ இந்தியாவின் பறக்கும் ராணி என்று அழைக்கப்படும்.பீ. டி. உஷா தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ளமாட்டார்.

★ நைஜீரியாவில் எண்ணெய்க்குழாய் வெடித்ததில் 40 பேர் இறந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(து)

# உலகின் மிக நீளமான ஓவியம் சென்னைக் காட்சியகத்தில்

(சென்னை)

உலகிலேயே மிக நீளமானதாகக் கருதப்படும் 250 மீற்றர் நீளமும் 1½ மீற்றர் உயரம் கொண்ட ஓவியம் 10 நாட்களில் தொடர்ந்து தீட்டப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஓவியம் காட்சிக்காக சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

இந்த ஓவியத்தை ஓவியர் பி.வி. தாஸ்வரைந்துள்ளார். இந்த ஓவியக் கண்காட்சியை சென்னை முதல்வர் மு. க ஸ்ராலின்அண்மையில் திறந்து வைத்தார்.

இந்தக் காட்சி வைபவத்தில் அருங்காட்சியகத் தலைவர்உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(து)

# ஜம்மு-முதல்வர் அப்துல்லா மத்திய அரசுக்கு வேண்டுகோள்

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீர் முதலமைச்சர் பாருக் அப்துல்லா ஹிஸ்புல் முஜாகிதின் இயக்கத்துடன் உடனே பேச்சுவார்த்தையைத் தொடங்கும்படி மத்திய அரசைக்கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஹிஸ்புல் முஜாகிதின் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளதை அடுத்து டாக்டர் பாருக் அப்துல்லா செய்தியாளர்களிடம் பேசுகையில் அமைதியை ஏற்படுத்தும் எந்தமுயற்சியும் வரவேற்கத்தக்கது என்று கூறினார்.

இதேவேளை ஹிஸ்புல் முஜாகிதின் அறிவித்த யுத்த நிறுத்தத்தை ஜம்முகாஷ்மீர் ஆளுநர் மாநிலத்தின் அமைதியை ஏற்படுத்த இது ஒரு சாதகமான அறிகுறி என்று குறிப்பிட்டார்.

(து)

**உலகில் தொடரும் யுத்தத்தால்**

# 20இலட்சம்சிறுவர்கள்பலியாகினர் 60இலட்சம்பேர் காயமடைந்தனர்

## யுனிசெவ் தலைவர் தெரிவிப்பு

(லண்டன்)

உலக நாடுகள் பலவற்றிலும் தொடரும் கொடிய யுத்தம் காரணமாக பாதிக்கப்படுப ...

1986 தொடக்கம் 1996 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற உள்நாட்டு வெளிநாட்டுப் ...

60 இலட்சம் சிறுவர்கள் காயமடைந்திருப்பதாகவும் 10 லட்சம் சிறுவர்கள் அநாதைகள் ஆக்கப்பட்டிருப்பதா ...

வாசிகள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவகையில், சட்டவிரோதமாக மேற்கு ஐரோப்பாவுக்குள் செல்பவர்களை கடத்தும் முக்கிய இடமாக பொஸ்னியா விளங்குகிறது.

கடந்த 7மாதங்களாக இவ்வாறு சட்டவிரோதமானகுடியேற்றவாசிகள் கடத்தப்படுவதற்கு ஏதுவான சூழ்நிலைகள் அங்கு நிலவி வருகிறது.

பொஸ்னியாவில், எல்லைக் பெரும் பாலானோர் ஈரான் நாட்டவர்கள் என்பதும் ஏனையோர் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அவுஸ்திரேலிய சிட்னி தடுப்பு முகாமில் இலங்கையர் உள்ளிட்ட 85 சட்ட விரோதக்குடியேற்றவாசிகள் தம்மை உள்வாங்கக் கோரி உண்ணா விரதமிருந்து வருகின்றனர்.

(உ)

(லண்டன்)

உலக நாடுகள் பலவற்றிலும் தொடரும் கொடிய யுத்தம் காரணமாக பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களே, என யுனிசெவ் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் யுனிசெவ் அமைப்பின் சர்வதேச தலைவர் ஹெரோல் றோமி இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

1986 தொடக்கம் 1996 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற உள்நாட்டு வெளிநாட்டுப் போர்களில் சிறுவர்களின் பாதிப்பு குறித்த புள்ளிவிபரத்தினையும் யுனிசெவ் அமைப்பின்தலைவர் வெளியிட்டுள்ளார்.

இந்தவகையில் மேற்படி கால எல்லையில் நடைபெற்ற கொடும் யுத்தத்தின் விளைவாக 20 லட்சம் சிறுவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் 60 இலட்சம் சிறுவர்கள் காயமடைந்திருப்பதாகவும் 10 லட்சம் சிறுவர்கள் அநாதைகள் ஆக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சிறுவர்களில் பலர்போரில்நேரடியாகப் பங்குகொண்டதன்மூலமும் ஏனையோர் போர் ஆயுதங்கள் மற்றும் விமானத் தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## சிங்கப்பூர் நீர்மூழ்கிக் கப்பல் சுவீடனில் வெள்ளோட்டம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் கடற்படைக்கு முதல்முறையாக நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

கடற்படையை பலப்படுத்தும் வகையில் ஆர். எஸ். எஸ். காங்கிரஸ் என்ற புதிய நீர்மூழ்கிக் கப்பலை வாங்கியிருப்பதாகவும் அக்கப்பல் பல நவீன வசதிகள் கொண்டதென்றும் சிங்கப்பூர் துணைப் பிரதமர் நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில்; இக்கப்பல் சுவீடன் நாட்டில் கட்டப்படுகிறதென்றும் அடுத்தமாதம் வேறு கப்பல்களுடன் சுவீடனில் வெள்ளோட்டத்தில் விடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(து)

**உலக தரிசனம்**

# காற்பந்தாட்ட வீரர்களுக்கு இரத்த ஈரல் புற்றுநோய் ஏற்படும் அபாயம்

## இத்தாலியில் மட்டும் 165 பேர் பலி

காற்பந்து விளையாடுவோர் ஈரல், இரத்த புற்றுநோய்களின் பாதிப்புக்கு ஆளாகும் சாத்தியம் அதிகம் இருப்பதாக இத்தாலியில் இருந்து வெளியாகும் ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

காற்பந்துத் துறையில் பல வருடங்களாக சிறந்து விளங்கிய 165 பேர் இதுவரை இத்தாலியில் மரணமானதையடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்தே இம்முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

காற்பந்து விளையாட்டில் ஈடுபடும்போது அதிக ஓமோன்கள் பயன்படுத்தப்படுவதால் ஈரல்கட்டி, இரத்தப் புற்றுநோய் ஏற்படுவதாக அவ் ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், மேற்படி அறிக்கை குறித்து விளையாட்டுத்துறையைச் சேர்ந்தோர் பலரும் தமது அதிருப்தியினை வெளியிட்டுள்ளனர்.

இம் முடிவு விளையாட்டுத் துறையில் ஈடுபடும் வீரர்களிடத்து ஒரு மனச்சோர்வினை ஏற்படுத்தி காற்பந்து விளையாட்டில் பெரும் இடைவெளியினை ஏற்படுத்தும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்து
கோடாமை சான்றோர்க்கணி

குறள்

வலம்புரி

## பரீட்சைகள்

பல் விதமான பரீட்சைகள், பலப்பரீட்சைகள் என் பவற்றிற்கு ஆளாகி இருப்பவன் தமிழன். உலகிலே சபாக்கேடான பிறவி தமிழனோ என்று எண்ணத் தோன்று மளவிற்கு நொந்து போய் இருப்பவன் தமிழன். வாழ்க்கையை அழித்து அமிழ்ந்திக் கொண்டிருப்பவனும் அவனே.

நாளையநிர்வாகிகளுக்கு, நற்பிரஜைகளுக்கு நடக்கவிருக்கிறது க.பொ.த உடர்தரபரீட்சை. புலம்பெயர்ந்த நிலையில், பயப்பீதிநிறைந்த நிலையில் நடக்க விருக்கிறது இப் பரீட்சை. போதிய கற்றல் சூழலை இழந்து, கற்றலுக்கான தேடலை இழந்து தவிக்கும்மாணவர்கள் ஏராளம் இவற்றை நன்குபுரிந்து கொள்ள வேண்டியவர்கள் பரீட்சை நடத்து நரும், திணைக்கள நிர்வாகிகளும்.

அடிக்கடி மாறும் காவல் நிலையங்களால் ஏம்பலிக்க விட்ட நாய்கள் பராமரிப்பாரற்று பசியால் புலம்பும், சொறியாற் துவளும். அந்த நாய்களை விட கடி நாய்கள் கலங்கி நிற்கும்மாணவர்க்கு திணைக்களங்களில் பரீட்சைப் பொறுப்பில் அமரக் கூடாது. மனிதாபிமானத்தை விட்டு பாய்ச்சல் போடக் கூடாது. இவை கடந்த கால மாணவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள்.

தடுமாறும் உலகில் பரீட்சை மாணவர் பாட மாற்றம்கோருவர், பரீட்சை மண்டபமாற்றம்கோருவர், அடையாளங்களை நிருபிக்கும் ஆவணங்களை இழந்து நிற்பர், போக்கு வரத்துக் கஷ்டங்களால், சூழ் நிலைத்தியால் நேரம் தாழ்த்தி வருவர். வரும் போதும் துணுக்

★ நற்சிந்தனை

# விக்கினங்களை போக்கும் விநாயக வழிபாடு

# இடர்களை போக்கி; நலம்பல நல்கும்

இந்து மதப்பிரிவுகளுள் ஒன்றான காணாபத்திய மதத்தின் வணக்கத்திக்குரிய தெய்வமாக போற்றப்படும் விநாயக வணக்கம் காலகாலமாக சைவ மக்களால் பின்பற்றப் பட்டுவருகின்றது.

எக்கருமத்தை ஆரம்பிக்கும் போதும் விநாயக வழிபாட்டுடன் ஆரம்பிப்பது நமது வழமை என்பதால் விநாயக வழிபாட்டின் மேன்மையையும் மகத்துவத்தையும் அறிய வேண்டியது சைவப்பெருமக்களின் தலையாய கடனே.

அவ்வகையில் விநாயக வழிபாடு பல்வேறு காலகட்டங்களாலும் போற்றப்பட்டு வழிபாடாற்றப்பட்டு வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாரதீய புராணத்தில் 'சங்கட நாஷாணம்' எனும் பகுதியிலே கணபதிதுதி காணப்படுகிறது. 4ஆம், 5ஆம் காலப் பகுதியில் விநாயக வழிபாடு உதியுன்னத நிலையை அடைந்திருந்தது.

தக்சண தேசத்தில் சாளுக்கியர் காலத்தில் சப்தமாதுக்களோடு கூடிய விநாயக வடிவங்கள் காணப்பட்டன.

புராணங்களிலும் விநாயகர் பற்றிய குறிப்பு வருகிறது. 8ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலும் விநாயக வழிபாடு பரவியிருந்தது.

எங்களுடைய சமயத்தில் என்றும் கணபதிக்கு முதன்மையுண்டு. கோயில் கிரியைகளிலும், சமய விழாக்களிலும் முதல் வணக்கம் கணபதிக்கே உரியது.

'சுக்குலாம் பரதம் விஸ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்ன வதனம் தியாயேத்
சர்வ விக்னேப சாந்தயே'

என்ற சுலோகத்தில் தூய்மையான வெண்ணிற ஆடைக்குரியவனாகவும், நிலவு போன்ற மலர்ச்சியான முகத்தினை கொண்டவனாகவும், ஐந்து கரங்களினால் அகிலத்தில் அருள்வடிவாய் விளங்குபவனுமான விநாயகப் பெருமானே உம்மை வணங்குகின்றோம் என்று கூறப்படுகிறது.

விநாயகர் அறிவு வடிவானவர், 'அறிவென்னும் கணபதியை அகத்துக்கொள்வோம்' என்பது ஆன்றோர் வாக்கு.

### சிரசில் குட்டுதல்:

அவ்வாறான அருள்வடிவேயானவனை எம் முன்னோர்கள் கஜமுகாசுரனின் வதைவிற்குப்பின்னர் சிரசில் குட்டித் தோப்புக்கரணம் போடுவதனை வழக்கமாக்கிக் கொண்டனர். அதனைநாமும் இன்றுவரை வழக்கமாக்கிக் கொள்கிறோம். ஆனால் அதற்கான காரணங்களும் உள.

புருவ நடுவிலிருந்து உள் நோக்கி ஒரு கோடும், உச்சியிலிருந்து கீழ் நோக்கி ஒரு கோடும் சந்திக்கும் இடம் அறிவிற்கு நிறைகாலமாகும். உலகப்பற்றுகளில் மூழ்கி ஆன்மீகத்தை அறியாமல் நாஸ்திகனாய் வாழ்கின்ற ஒருவனை தட்டி எழுப்புவது போல ஞான விநாயகனிடம் சென்று மயங்கிய அறிவைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு சிரசில் குட்டிக் கொள்வதென உணர்க.

உடம்பு வளைந்து நிமிர்வதனாலும், சுறுசுறுப்பு மிகுதியாலும் அறிவில் தெளிவு ஏற்படுகிறது.

ஆகவே பிள்ளையார் திருமுன் குட்டித் தோப்புக்கரணம் போடுகின்ற வணக்க முறையை நம்முன்னோர்கள் வழி வழியாகக் கையாண்டு வருகிறார்கள்:

பிள்ளையார் முன் பயபக்தி விசுவாசத்துடன் குட்டிக் கொண்டு நன்றாக உட்கார்ந்து எழுந்து மூன்றுமுறை தோப்புக் கரணம் போட வேண்டும். இதனால் அறிவும் ஆக்கையும் நலம்பெறும்.

**தர்மினி**

## மக்கள் பதற்றத்துடன் பயணம்

(தென்மராட்சி)

நெடுந்தீவுக்கான சீரான அரச படகுகள் இல்லாததால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியாருக்குச் சொந்தமான சிறிய படகுகளில் பதட்டத்துடனும் பயத்துடனும் நெடுந்தீவு மக்கள் பயணம் செய்து வருகின்றனர்.

இப்பயண சேவையை மேம்படுத்தும்படி இப்பகுதி மக்கள் அரசுக்கு மகஜர் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (வ-77)

## சம்பியனாக தெரிவு

(இருபாலை)

யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட 19 வயதுக் குட்பட்டோருக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாவட்ட சம்பியனாக தெரிவாகியுள்ளது. (ந-2)

## யூ. என். எச். சீ. ஆர். உதவி

(இருபாலை)

அண்மைக்கால அனர்த்தங்களினால் தென்மராட்சி மற்றும் பளைஆகியபிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் தெற்கில்தற்காலிகமாக வசிக்கின்ற குடும்பங்களுக்கு யூ என். எச். சீ. ஆர். இனால் வீட்டுப் பாவனைப் பொருட்கள் இலவசமாக இன்றுமுதல் வழங்கப்படும் என கோப்பாய்தெற்குகிராம உத்தியோத்தர் எஸ். தயாபரன் தெரிவித்துள்ளார். (ந2)

## சிறுவன் காயம்

(வவுனியா)

கிளிநொச்சிப் பகுதியில் வீட்டுக்காணியை துப்பரவு செய்து குப்பைக்கு தீமூட்டிய போது அதனுள் இருந்து வெடிபொருள் வெடித்ததில் சிறுவன் ஒருவன் கண்ணிலும் காலிலும் காயமடைந்து கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்

இச்சம்பவத்தில் விஜய கோபிநாத்[வயது14]என்ற சிறுவனே காயம் அடைந்துள்ளார். (வ.7)

# ஆடிக்கலவரத்தின் சோக நிகழ்வுகள்

# தமிழர் இதயங்களின் அழியா வடுக்கள்!

'போர் என்றால் போர்; சமாதானமென்றால்; சமாதானம்'' அன்றைய ஸ்ரீலங்காவின் ஆட்சித் தலைவர் 'தர்மிஷ்டர்'' ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிங்களப்

...கில் ஸ்ரீலங்காவின் மதிப்பு மட்டரகமாக மதிக்கப் பட்டது.

இந்த யுத்தப்பிரகடனமானது நாடளாவிய ரீதியில் வடக்குக் கிழக்கு தென்னி

...சூறையாடப்பட்ட பின் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

இவற்றைவிட தமிழ்மக்கள் வாழ்ந்து வந்ததும் அவர்களுக்குச் சொந்தமானவையும், சொந்தமற்றதுமான

தமிழ் பேசும் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள், அவர்களது உடமைகள் அழிக்கப்படுகின்றன. என்று அரசுத், தலைவர்களுக்கு செய்திகள் எட்டிய போதும்

கும் ஆவணங்களை இழந்து நிற்பர், போச்கு வரத்துக் கஷ்டங்களால்,சூழ் நிலைத் தியால் நேரம் தாழ்த்தி வரு வர். வரும் போதும் துணுக் குற்ற உளத்தினராய் நிற்கக் கூடும். இவர்களைக் கருணை யோடு அணுக வேண்டும். மாற்று வழிகளைக்காணும் அதிகாரங்களை ஏலவே பெற்றாக வேண்டும்.

சட்டம் ஒரு இருட்டறை என்பது பேரறிஞர் அண்ணா தென்னகத்து பேர்னாட்ஷா வின் கூற்று. பாவம் அவர் சொன்ன இருட்டுக்குள் நின்று சுய நலச் சுரட்டல்க ளைத் தாராளமாகச் செய் பவர்கள் சூழலால் மிரட்டப் பட்ட, பாதிக்கப்பட்ட பரீட் சார்த்திகட்கு இரங்க வேண் டும். விதி முறைகளை நழுவ விடாது உதவவும் வேண் டும்.

எங்கள் கையில் ஆட்சி நேர்மையானதாய், நிலை தளம் பாததாய், அன்புடை யதாய், அவலமும், அழுக் காறும் அற்றதாய் இருக் கும் என்பதை செயலில் காட்ட அதிகாரக்கதிரைகள் ஆர்ப்பரிக்கட்டும்.

-அன்புடன் ஆசிரியர்

'போர் என்றால் போர்; சமாதானமென்றால்; சமா தானம்'' அன்றைய ஸ்ரீலங்கா வின் ஆட்சித் தலைவர் 'தர்மிஷ்டர்'' ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிங்களப் பேரினவாதிகளுக்கு விடுத்த அறை கூவல்.

1983ம் ஆண்டு ஆடித் திங்களில்வெலிக்கடைச்சிறை யில் அடைக்கப்பட்டிருந்த போராளிகள் குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட 53 போராளிகளையும், அப் பாவிப் பொது மக்களையும் மனித நேயத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் அப் பாற்பட்ட வகையில் அரு வருக்கத்தக்க முறையில் வெட்டியும், அவர்களது உடல்களை சின்னா பின் னப்படுத்தியும் கொன்றுகுவித் தார்கள். குட்டிமணியின் 'கண்கள்' கூட தோண்டிஎடுக் கப்பட்டது.

வெலிக்கடைப் படுகொலை களை குளிரூட்டிய அறை களில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தவர்கள் இனப் படுகொலைப் பிரகடனத்தை இனவெறியர்கள் மத்தியில் பிரகடனம் செய்த அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவித்தும் அவர்கள் உடமை களை சூறையாடியும் வர லாற்றில் கறைபடிந்த பதிவு களாக்கினர்.

ஆட்சியாளர்களின் இத்த கைய அருவருக்கத்தக்க இச் செயல்களினால் உலக அரங் கில் ஸ்ரீலங்காவின் மதிப்பு மட்டரகமாக மதிக்கப் பட்டது.

இந்த யுத்தப்பிரகடனமா னது நாடளாவிய ரீதியில் வடக்குக் கிழக்கு தென்னி லங்கை அடங்கலாக தமிழ் மக்களின் குருதி ஆறாக பெருக்கெடுத்தோடி உறை யும்வரை பார்த்துக்கொண்டி ருந்த அரசுத் தலைவர், சூறையாடப்பட்ட பின் எரித் துச் சாம்பலாக்கப்பட்டன.

இவற்றைவிட தமிழ்மக்கள் வாழ்ந்து வந்ததும் அவர்க ளுக்குச் சொந்தமானவை யும், சொந்தமற்றதுமான இருபதினாயிரம் வீடுகள் அழித்தொழிக்கப்பட்டன. அழித்தொழிக்கப்பட்ட இந்த உடமைகளின்பெறுமதி சுமார் 950 மில்லியன் ரூபாவிற்கும்

> ஆடிக் கலவரத்தில் எழுந்த தீயில் தமிழ் மக்களுக்கு சொந்தமான 122 தொழிற்சாலை கள்; 2 ஆயிரத்து 300 வர்த்தக நிலையங்கள்; இரு பதினாயிரம் வீடுகள் அழித்தொழிக்கப்பட்டன. இவற்றின்மொத்தப் பெறுமதி சுமார் 950 மில்லி யன்ரூபாவிற்கு மேல்என்றுமதிப்பிடப்பட்டுள்ளது.

'தர்மிஷ்டர்' ஊரடங்கு உத் தரவு பிறப்பித்தமை சர்வ தேச சமூகம் அறிந்தஉண்மை யாகும்,

இந்த அராஜகம் நடை பெற்று 17 ஆண்டுகள் கழிந்த போதும், நடைபெற்ற சம்ப வங்கள் இன்னும் எம் கண் முன்னே காட்சியளித்துக் கொண்டே இருக்கிறது.

ஆடிக் கலவரத்தின் போது இவர்கள் பேரினவாதிகளி னால்கொழுந்துவிட்டு எரிந்த தீயில் தமிழ்மக்களுக்குச் சொந்தமான, அவர்களால் நடத்தப்பட்ட 122தொழிற் சாலைகளும் 2 ஆயிரத்து 300 வர்த்தக நிலையங்களும் மேல் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

இச் சம்பவமானது தமிழ் மக்களை உளரீதியாக பாதித் துள்ளதுடன், அவர்களது பொருளாதார வளத்தையும் சீரழிக்கக்கூடியதாக இருந் தது.

ஆடிப் படுகொலைகளுக்கு முன்பு1958இலும் இனப்படு கொலை ஒன்று அரங் கேற்றம் செய்யப்பட்டது. இந்த இனப்படுகொலைஅரங் கேற்றத்திற்குபிரதம கதாநா யகனாக நடித்த வர் அன்றைய பிரதமரான எஸ்.டபிள்யூ ஆர்,டி. பண் டாரநாயக்கா ஆகும்.

தமிழ் பேசும் மக்கள் படு கொலை செய்யப்படுகிறார் கள், அவர்களது உடமைகள் அழிக்கப்படுகின்றன. என்று அரசுத், தலைவர்களுக்கு செய்திகள் எட்டிய போதும் கண்டும் காணாதமாதிரி வாளா இருந்தனர்

இந்நிலையில் இலங்கைத் தமிழர்கள் மீது அனுதாப அலை இந்தியாவில் குறிப் பாக தமிழகத்தில் இருந்து வீசத் தொடங்கியது அந்த அலையானது சாதாரண அலையாக இராது தமிழ்ப் போராளிகளுக்கு புகலிடம் அளித்து அவர்களை பாது காக்கும் அளவிற்கு வழிவகுத் திருந்தது

1983ன் ஆடிப் படுகொலை கள்குறிப்பிட்ட சிலதினங்களு க்குள் முற்றுப்பெற்றுவிட்டது ஆனால் அந்தஆடி அடாவ டித்தனங்கள் நடைபெற்று17 ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழ்மக்கள் தினமும் காணா

## நக்கீரன்

மல்போவதையும், கைது களையும், புதைகுழிகளையும், சித்திரவதைகளையும் இன்று வரை அனுபவித்துவருகிறார் கள்

ஆண்டுகள் 17சென்றாலும் 1983ஆம் ஆண்டின் ஆடி அழிவுகளை மக்கள் என்றும் மறந்துவிடப் போவதில்லை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



# பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு பயிற்சிக்கலாசாலையில் அனுமதி

(கொழும்பு)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு தேவையான தகுதியுடன் விண்ணப்பித்திருந்தும் அனுமதி மறுக்கப்பட்ட யாழ். குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 182 பயிற்றப்படாத ஆசிரியர்களை பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

தொலைக் கல்விக்கு விண்ணப்பித்ததை காரணம் காட்டி கலாசாலைக்கு அனுமதி மறுக்கப்பட்ட பயிற்றப்படாத ஆசிரியர்கள் கடந்த 3ஆம், 4ஆம் திகதிகளில் பலாலி, கோப்பாய் பயிற்சிக் கலாசாலைகள் முன் மறியற் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தா மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை ஆகியோர் வழங்கிய உறுதி மொழியை அடுத்து இம் மறியற் போராட்டம் கைவிடப்பட்டிருந்தமையும் ஏற்கனவே தெரிந்ததே.

கலாசாலைக்கு அனுமதி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலுடன் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அடுத்த மாதம் 4ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ். வருவார் எனவும் தெரியவருகிறது.

## இணக்கம்...

சங்கத்தினருக்கும் அரசு அனுப்பிவைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவும் பாராளுமன்றக் குழுவும் நேற்றுக்கூடி தீர்மானித்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுவும், செயற்குழுவும் நேற்றுகட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது கூட்டம் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2,30 வரைநீடித்தது.

அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணங்கியுள்ள முக்கிய விடயங்களே சகல அரசியல் கட்சித்தலைவர்களுக்கும் மற்றும் அனைத்துத்தரப்பினருக்கும் அனுப்பிவைக்கவேண்டும் என்றும்;

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்காமல் எம்.பிக்களின் தொகையை அதிகரிக்கும் அரசின் முயற்சியை எதிர்ப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அரசுஅழைத்தால் அதில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளும் எனவும்; ஆனால் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளமாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக அரசின் யோசனைகளை அனைத்துத்தரப்பும் ஆதரித்தால் ஐக்கிய தேசியக்கட்சியும் ஆதரிக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ)

## தரம் 9...

பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையிலும் வழங்கப்படவுள்ளது.

இச்சான்றிதழ்கள் எதிர் வரும் ஆண்டுகளில் 6ம், 7ம் 8ம் தர மாணவர்களுக்கும் இதே அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## சர்வாதிகார...

லாளர் பேர்ளி விக்கிரமசேகரா தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஆரம்ப விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பு சாலிகா மண்டபத்தில் நேற்று வாசுதேவ நாணயக்கார தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

யாழ். குடாநாடு பிரிக்கப்பட்ட நிலையில் அங்கு 5 லட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் அவர்கள் உரிமை அற்று பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்று கட்சியின் செயலாளர் அ. செந்தில்வேல் தெரிவித்துள்ளார். (வ)

# சஞ்சீவனின்கொலையை கண்டித்து வவு. மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மாணவர்களும் நேற்று பாடசாலைகளுக்குச்செல்லாதுபகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை எடுக்கும் மாணவன் சுதன் இம்மாதம் 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை தொடர்பாகவும் யாழ் இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் கண்டித்து இப்பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த இப் பகிஷ்கரிப்பில் சுமார் 25 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்டதாக எமது வவுனியா செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இப்பகிஷ்கரிப்பு இன்றும் தொடரும் என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (வ)

## இலங்கைப்...

கொள்வதாயின்01—889200 அல்லது 01 — 889208 ஆகிய இலக்கங்கள் மூலமும் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகம் இலங்கை பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, த.பெ. எண் - 1502, கொழும்பு என்ற தபால் முகவரியுடன் கடிதத்தில் தொடர்புகளை மேற்கொள்ள முடியும். [வ]

## ஜனாதிபதி...

8,9,10, 11 ஐச் சேர்ந்த 20 மாணவர்களுக்கும் இப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண வலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பு நடைபெறும் 25 பாடசாலைகளில் இருந்து தலா இரண்டு மாணவர் வீதம் 50 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த 50 மாணவர்களும் வறுமை அடிப்படையிலும் திறமை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்,

ஏனைய 10 மாணவர்கள் குறித்த பகுதி பிரதேச செயலரின் சிபார்சின் பேரில் தெரிவு செய்யப்படுவர்.

இதேவேளை க.பொ.த. உயர்தரவகுப்புகள் இல்லாத பாடசாலைகளில் 8,9,10,11 தரங்களில் இருந்து ஒரு பாடசாலைகளில் 2 பேர் வீதம் 20 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர். [வ]

## அன்ரன்...

ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இணையவிருக்கும் ஐ.தே.க. எம்.பியும்முன்னாள அமைச்

# மட்டக்களப்பில் காணாமல் போனோர் தொடர்பாக 131 முறைப்பாடுகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன்மாதம் வரையான ஆறு மாதங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பாக 131 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கபடுகிறது.

காணாமல் போனவர்களில் 20பேர் தொடர்பாக இதுவரை எதுவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. என சர்வதேசசெஞ்சிலுவைக் குழுவின் மட்டக்களப்பு தலைமைப் பிரதிநிதி யோன் நிக்கலஸ்பீற்றர் தெரிவித்துள்ளார்.

கடந்த 6 மாதங்களில் 1228 பேர் மட்டக்களப்பு ஐ.சி.ஆர்.சியுடன் தொடர்பு கொண்டு தமக்கு அல்லது குடும்ப அங்கத்தவர்களுக்கு பாதுகாப்புவேண்டும் என்றும் தடுப்புக்காவலில் உள்ள 220பேரையும் சந்திக்க முடிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெளிமாவட்டங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களைப் பார்வை இடுவதற்கு அவர்களின் உறவினர்கள் 488 பேருக்குபோக்குவரத்துச் செலவு வழங்கப்பட்டுள்ள தென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மாமியார் கொலை மருமகன் தற்கொலை

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் மருமகன் ஒருவர் மாமியாரைக் கொலை செய்து தானும் தற்கொலை செய்த சம்பவமொன்று நேற்றிரவு இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் தெய்வநாச்சி (வயது 64)என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இக்கொலையினைச் செய்த உதுமன் லெல்வை என்பவர் தற்கொலை செய்து கொண்டார்.

இக்கொலை, தற்கொலை தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## நல்லூர்.

10 மணிக்கு நடைபெறுவதாக இருந்த போதிலும் பிற்பகல் 2 மணிக்கே நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## அரசியல்...

கிய தேசியக் கட்சி ஆதரவு அளித்தால் என்ன அளிக்கா விட்டால் என்ன இம்மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் அரசின் திட்டத்தில் எதுவித மாற்றமும் இல்லை.

அரசியல் சீர்திருத்த மசோதாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு அளித்துவிட்டு இப்போது அரசியல் லாபம் கருதி ஐக்கிய தேசியக்கட்சி இப்படியாக நடந்துகொள்கிறதே என்று அவர் விசனம் தெரிவித்தார். (வ)

## உ அட்டை...

இடம்பெயர்வினால் இன்னலுறும் மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டே இந்நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சுடன் தான் தொடர்பு கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார். (க-03)

நீங்கள்...!

★ A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவரா......?

★ 17 வயதிற்கு மேற்பட்டவரா......?

★ 17 வயதிற்கு மேற்பட்டவரா......?

★ உங்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கிறீர்களா...?

ஆம் எனில்......

**கவலையை விடுங்கள்**

## கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பட்டதாரி ஆகும் சந்தர்ப்பம் உங்களுக்காகவே

மேலதிக விபரங்களுக்கு 30-07-2000ற்கு முன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**நினைவிருக்கட்டும்**

இலங்கையின் முதல் கணனிப் பட்டதாரி நீங்கள் தான்...

# IBMS

701, K.K.S. Road,
JAFFNA (near Jaffna Hindu College)

(கி-675)


இணையவருக்கும் ஐ.தே.க. எம்.பியும்முன்னாள அமைச்சருமான றொனிடிமெல் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பு கொள்வதற்கு முயற்சித்து வருவதாகவும் தெரியவருகிறது.

அமைச்சர் கதிர்காமரது முயற்சியும் றொனிடிமெல்லின் முயற்சியும் வெற்றி அளிக்கும் பட்சத்தில் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் லண்டன் செல்லலாம் எனவும் அரசியல் அய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

(வ)


# கஜன்

ஊர்காவற்றுறை

நாசர், குஷ்பு, வடிவேலு நடித்த

## கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி

(கி/652)


# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு மதியாபரணம்

(ஓய்வுபெற்ற மின்கம்பியிடுபவர், யாழ்/ மாநகரசபை)

பூமகள் வீதி, அரியாலை மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு மதியாபரணம் 2000-07-22ஆம் திகதி கொழும்பில் காலமானார், அன்னார் திருமதி மதியாபரணம் மாணிக்கமணியின் அன்புக் கணவரும், மதியாபரணம் மதிகாந்தன் (லண்டன்). திருமதி கணேஸ் வானதி (கனடா), காலம்சென்ற மதியாபரணம் தவகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகேசு பீதாம்பரம் (நிர்வாக உத்தியோகத்தர். பிரதேசசெயலகம், தெல்லிப்பழை), கார்த்திகேசு தில்லையம்பலம் (கிராம உத்தியோகத்தர், நாவாந்துறை தெற்கு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லப்பா கணேஸ் (கனடா) அவர்களின் மாமனாரும், நா. மகாதேவா (C. T. B.), நா. பாலேந்திரன் (C T.B), நா. கந்தசாமி. (வவுனியா). நா. பாலகிருஷ்ணன் (யாழ்/ போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2000 - 07 - 26ந் திகதி கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றது; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்;

தகவல்;
கா. தில்லையம்பலம்
கிராம உத்தியோகத்தர்,
நாவாந்துறை, தெற்கு;

(1601)


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு; யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ளவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.